தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 140/ந/2023
நாள் 26.07.2023

| | | |
|---|---|---|
| திரு. A. கந்தசாமி,<br>கள்ளக்குறிச்சி,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்,<br>கள்ளக்குறிச்சி நகராட்சி,<br>கள்ளக்குறிச்சி மாவட்டம். | – | எதிர் மனுதாரர் |

கள்ளக்குறிச்சி மாவட்டம், கணக்குப்பிள்ளை தெரு, எண்.14–C என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. கந்தசாமி என்பவரின் 22.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.05.2023 அன்று பெறப்பட்டு 140/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கள்ளக்குறிச்சி மாவட்டம், கணக்குப்பிள்ளை தெரு, எண்.14–C என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. கந்தசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

i. "நாங்கள், எங்களுக்கு பூர்வீக சொந்தமான அயன் நஞ்சை விவசாய நிலம் புல எண்.156/1 & 2 மற்றும் 171 உட்பிரிவு 4–ல் நல்லமுறையில் விவசாயம் செய்து வருகிறோம். அதை ஒட்டி அயன் நஞ்சை விவசாய நிலத்தில் புதியதாக ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு 10 வீடுகள் விற்பனைக்காக கட்டப்பட்டுள்ளது. இதனால் அனைத்து நீர்வழிப் பாதைகள் அடைக்கப்பட்டுள்ளன. எனவே கடந்த 3 ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியாத துர்பாக்கிய நிலை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. மழைக்காலத்தில் மழை நீர் மற்றும் ஏரி வாய்க்கால் பாதைகள் தடுக்கப்பட்டுள்ளது.

ii. ஸ்ரீராஜேஸ்வரி நகர் மனை பிரிவால் சுமார் 500 ஏக்கர் அயன் நஞ்சை விவசாய நிலம் முற்றிலும் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு, ரியல் எஸ்டேட் புரோக்கர்கள்

மிரட்டலுக்கு அஞ்சி அவர்கள் வசம் சென்று விடும். அயன் நஞ்சை விவசாய நிலம் மற்றும் விவசாய நிலத்தில் செல்லும் நீர் வழி பாதையில் மனைப்பிரிவுகள் அமைக்கக் கூடாது என உச்ச நீதிமன்ற உத்தரவுகள் உள்ளன என்பது தாங்கள் அறிந்ததே ஆகும்.

iii. ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற மனைப்பிரிவுகள் மற்றும் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள 10 தனி வீடுகளுக்கு எவ்விதமான அனுமதியும் வழங்கக்கூடாது என தடங்கள் மற்றும் புகார் மனுவை 01.12.2020 அன்று நான், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், கள்ளக்குறிச்சி மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்திற்கும் தடங்கல் மனு பதிவு அஞ்சலில் அளித்து அதற்கான ஒப்புகையும் பெற்றுள்ளேன். நேரிலும் சென்று அது தொடர்பாக விளக்கம் அளித்தேன்.

iv. ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற மனைப்பிரிவுக்கு நான்கு திசைகளிலும் அணுகு சாலைகள் இல்லை. நீர் வழி தடத்தை அணுகு சாலையாக காட்டியுள்ளார்கள். புல எண்.157–ல் ரயில் பாதை அமைக்க தமிழக அரசால் கையகப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

v. விதிமுறைகளுக்கு எதிராக அமைக்கப்பட்ட ஸ்ரீராஜேஸ்வரி நகருக்கு சாதகமாக கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் மற்றும் நகர திட்டமிடல் அலுவலர்கள் அயன் நஞ்சை விவசாய வேளாண்மை நிலத்தில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவு சாலைகளை சட்டத்திற்கு எதிராக, சாலைகளை GIFT DEED –ஆக பெற்றுள்ளார்கள்.

vi. ஆவண எண் மற்றும் ஆண்டு 3055/2021, தேதி 09.08.2021 அயன் நஞ்சை புல எண்.156, உட்பிரிவு –4 மற்றும் புல எண்.157, உட்பிரிவு 1, 2, 2B, 2A, 3A2 நிலத்தின் வகைப்பாட்டை அயன் நஞ்சை விவசாய நிலம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. அயன் நஞ்சை விவசாய விளை நிலத்தில் மனைப்பிரிவு மற்றும் வீடு அமையக்கூடாது என்பது முதன்மையான விதி.

vii. அதே விவசாய நிலத்தை ஆவண எண் மற்றும் ஆண்டு 3187/2021, தேதி 16.08.2021 அயன் நஞ்சை விவசாய நிலத்தை சொத்தின் வகைப்பாட்டை PATHWAY, ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு ஆவண பதிவுகள் 7–நாட்களில் அவசர அவசரமாக பதிவு செய்து முறைகேடு செய்துள்ளார்கள்.

viii. மேற்கண்ட ஆவண பதிவை நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் – 1971 மற்றும் TNRERA (Tamil Nadu Real Estate Regulatory Authortiy, Chennai ) விதிமுறைகளுக்கு உட்பட்டதா? என்றும், அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைப்பிரிவா? என்றும், மனைப்பிரிவில் வீடுகள் கட்டப்பட்டுள்ளதா? என்றும், தமிழக அரசால் கையகபடுத்த அரசாணை வெளிப்பட்டுள்ள பகுதியா? என்றும் மேற்கண்ட மனை பிரிவுகளின் நிலத்தின் வகைப்பாட்டை ஆய்வு செய்யாமல் கள்ளக்குறிச்சி மாவட்ட பதிவாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் முறைகேடாக பத்திரத்தை பதிவு செய்து ஊழல் செய்துள்ளார்கள்.

ix. ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற மனைப்பிரிவை ஆய்வு செய்யாமல், கொள்கை ரீதியிலான ஒப்புதல் வழங்கிய நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட பத்திரப் பதிவாளரும் மேற்கண்ட ஊழலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும் தெரியப்படுத்துகிறேன். அவர்கள் மீதும் ஊழல் விசாரணை செய்ய வேண்டும்.

x. மேற்கண்ட ஆவணப் பதிவு, அரசு விதிகளுக்கு புறம்பாக, ரியல் எஸ்டேட் புரோக்கருக்கு சாதகமாக ஆணையாளர் திரு.குமரன் சட்டத்திற்கு எதிராக பத்திரப் பதிவு செய்துள்ளார். மேற்கண்ட பத்திரப் பதிவில் மிகப் பெரிய ஊழல் மற்றும் லஞ்சம் வழங்கப்பட்டுள்ளது என தெரிகிறது. எனவே நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் மற்றும் நகர திட்டமிடல் அலுவலர்கள் மீது ஊழல் விசாரணை செய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

xi. 20.10.2016–முன் ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற ஓர் மனை பிரிவு ஏற்படுத்தப்படவில்லை. முறையான அங்கீகாரம் பெறாமல் விற்பனைக்காக 10 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. அதற்கு அங்கீகாரம் பெற பல லட்சங்கள் ஆணையாளர் திரு.குமரன் என்பவரிடம் பேரம் பேசப்படுகிறது.

xii. ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற மனைப்பிரிவு தொடர்பாக கள்ளக்குறிச்சி நகர ஊரமைப்பு அலுவலகத்தில் பல புகார்கள் மற்றும் விசாரணை நடைபெற்று வருகிறது. அது தொடர்பாக நகர ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு உரிய பதில்கள் இது நாள்வரை ஆணையாளர் வழங்கவில்லை.

xiii. ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்ற மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்புத் துறையால் வழங்கிய கொள்கை ரீதியலான ஒப்புதல் மற்றும் அயன் நஞ்சை விவசாய வேளாண்மை நிலத்தில் அமைக்கப்பட்ட மனை பிரிவுச் சாலைகளை சட்டத்திற்கு எதிராக GIFT DEED பெற்றதையும் ரத்து செய்ய வேண்டி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே கள்ளக்குறிச்சி ஆணையாளர் திரு.குமரன் மற்றும் நகர திட்டமிடல் ஆய்வாளர் திரு.தாமரை செல்வன் மீது லஞ்சம் மற்றும் ஊழல் புகார் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தங்களை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் தனது 09.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

i. "மனுதாரருக்கு சொந்தமான புல எண்.156/1 & 2 மற்றும் 171/4–ற்கு அருகாமையில் அமைந்துள்ள கிராம புல எண்.157/1, 2A,3A மற்றும் 156/4–ல் அமைந்துள்ள ஸ்ரீராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.6579/2018/விம நாள்.22.08.2019–ல்

கொஓ.ம.வ./ந.ஊ.உ.இ(வி.ம) எண்.R691/2019 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கூடிய கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ளார். மேலும் இம்மனைப்பிரிவில் கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் எவ்வித கட்டட அனுமதியும் பெறாமல் 10 கட்டடங்கள் கட்டியுள்ளார். அரசாணை எண்.195 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.05.11.2022–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடத்திற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி கட்டட உரிமையாளர் திரு.J.ஜனார்த்தனன் என்பவருக்கு கடந்த 02.03.2023 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி கட்டடத்தினால் எவ்வித நீர்வழிப் பாதையும் அடைக்கப்படவில்லை. மனுதாரர் தொடக்கத்திலேயே நல்ல முறையில் விவசாயம் செய்து வருகிறோம் என தெரிவித்து பின்பு மூன்று வருடங்களாக விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது என்று முன்னுக்குப்பின் முரணான தகவலை தெரிவிக்கிறார். மழைக் காலத்தில் மழைநீர் மற்றும் ஏரி வாய்க்கால் பாதை தடுக்கப்படவில்லை. இவ்வாய்க்கால் பொதுப்பணிதுறைக்கு சொந்தமானது இதுபோன்ற நிலை ஏற்பட்டால் பொதுப்பணித்துறை இதன் மீது நடவடிக்கை எடுத்திருக்கும், ஆனால் நீர்வழிபாதை தடுக்கப்படவில்லை .

ii. ஸ்ரீராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவிற்கும், அதனைச் சுற்றியுள்ள அனைத்து விவசாய நிலங்களுக்கும், வாய்க்கால்கரைதான் அணுகு சாலையாகும். புல எண்.157–ல் ரயில்பாதை அமைக்க கையகப்படுத்தவுள்ள நிலங்களின் உட்பிரிவு விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை.

iii. மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள ஸ்ரீராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடுகள் அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 13.10.2017–ல் விதி எண். 7 (g) (ii)–ன்படி உள்ளாட்சிக்கு தானமாக எழுதி கொடுக்கவில்லை எனில் தன்னியல்பாகவே உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும். மேலும் அரசாணையின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவிற்கு அருகாமையில் மனுதாரரின் நிலம் அமைந்துள்ளதால், மேற்படி மனைப்பிரிவின் வழியே அணுகு பாதை அமைத்துக்கொள்வதற்கு திட்டமிட்டு மனுதாருக்கும், ஸ்ரீராஜேஸ்வரி நகர் மனைப்பிரிவு உரிமையாளருக்கும் ஏற்பட்டு வரும் இப்பிரச்சனையின் காரணமாக இது மாதிரியான பொய்யான புகாரை நகராட்சி மீதும், எங்கள் மீதும் பல்வேறு துறைகளுக்கு அனுப்பி வருகிறார். எனவே இத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து மனுதாரரின் புகார் மனுவினை தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரும் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரும் 10.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.06.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. A. கந்தசாமி 10.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''எங்களுக்கு சொந்தமான அயன் நஞ்சை விவசாய நிலம் புலஎண் 156/ 12 மற்றும் 171 உட்பிரிவு 4ல் உள்ள இடத்தில் விவசாயம் செய்து வருகிறோம். எங்களது இடத்தை ஒட்டியுள்ள விவசாய நிலத்தில் புதிதாக மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு 10 வீடுகள்

விற்பனைக்காக கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவிற்கான வரைபட அனுமதி போலியான ஆவணங்களைக் கொண்டு DTCP-யில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவிற்கு பாதையில்லை. மேற்கண்ட மனைப்பிரிவிற்கான தானப்பத்திரம் விதிகளை மீறி, அரசாணைக்கு மாறாக நகராட்சியால் பெறப்பட்டுள்ளது. மேலும் வரன்முறைக்கு மாறாக மேற்கண்ட வீடுகளுக்கான வரன்முறைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேற்கண்ட மனைப்பிரிவில் மனை எண் 22 மற்றும் 49 ஆகிய எண்கள் கொண்ட மனைகள் விற்கப்பட்டதாக போலியான மற்றும் உண்மைக்கு புறம்பாக தகவல் அளித்து Development Charge செலுத்துவதற்கு நகராட்சியில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நீர் வழிப் பாதையை மறித்து மேற்கண்ட மனைப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள 1500 ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நீர் பாசன வசதி இல்லாமல் போய்விடும் அபாயம் உள்ளது என்பதை இம்முறை மன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கடந்த 2020 ஆம் ஆண்டு இது குறித்து கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு (தற்போது நகராட்சி) புகார் மனு அளித்தபோது அப்போதைய நகராட்சி அலுவலர் (பொறுப்பு) திருமதி லட்சுமி என்பவர் மேற்கண்ட மனைப் பிரிவுகளுக்கான வரைபடம், விதிகளை மீறி பெறப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்கண்ட வீடுகளுக்கான வரன்முறைபடுத்தும் கட்டண படிவத்தில் கையொப்பமிடவில்லை எனவும் ஆனால் பின்னர் வந்த ஆணையர் அங்குள்ள வீடுகளுக்கு Development charge மற்றும் வீடுகளை வரன்முறைபடுத்துவதற்கான கட்டணங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் அளிக்கப்படும் 22.6.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான திண்டிவனம் நகராட்சி ஆணையராகவும், கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) பணியாற்றும் திருமதி.பெ.தமிழ்ச்செல்வி மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சியில் நகரமைப்பு ஆய்வராக பணியாற்றும் திரு.ச.தாமரைசெல்வன் ஆகிய இருவரும் 10.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள்.

"திண்டிவனம் நகராட்சி ஆணையரான நான் தற்போது கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையராக (பொறுப்பு) கடந்த 8 தினங்களாக பணியாற்றி வருகிறேன். மனுதாரரின் இடத்திற்கு அருகில் அமைந்துள்ள கிராம புல எண் 157/1 , 2A 3A மற்றும் 156/4ல் அமைந்துள்ள ஸ்ரீராஜேஸ்வரி மனைப் பிரிவிற்கு 22.8.2019ல் நிபந்தனைகளுடன் கூடிய கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ளனர். மேற்கண்ட மனைப்பிரிவில் 10 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட வீடுகளுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு ( Notice for production of Document ) 2.3.2023 அன்று தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது. அதன் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் தெரிவித்துள்ளவாறு 2019ல் கள்ளக்குறிச்சி ஆணையராக (பொறுப்பு) திருமதி லட்சுமி என்பவர் ஆணையராக பதவி வகிக்கவில்லை. மாறாக கடந்த 22.8.2016 முதல்

31.08.2018 வரை பதவி வகித்து வந்தார் என்பதையும், மனுதாரர் தெரிவித்தவாறு மேற்கண்ட மனைப்பிரிவிற்கான வரைபடம் விதிகளை மீறி பெறப்பட்டது எனவும், எனவே அவற்றை வரன்முறைப்படுத்த இயலாது எனவும் மேற்கண்ட ஆணையர் திருமதி லட்சுமி அவர்கள் தெரிவிக்கவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் மனை எண்கள் 22 மற்றும் 49-ஐ பொறுத்தவரை நகர ஊரமைப்பு இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் 22.08.2019 நாளிட்ட செயல்முறை நடவடிக்கையின்படி விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைகளுக்கும் வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும வளர்ச்சி கட்டணம் வசூலிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட மனைப்பிரிவு அமைந்துள்ள இடம் நீர் நிலை இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டதில்லை. மனுதாரர் மேற்கண்ட மனைப்பிரிவின் வழியே அணுகு பாதை வேண்டி வழி கேட்டு வருகிறார். அவருக்குள்ள வழியை உபயோகப்படுத்தாமல், மேற்கண்ட பாதையில் வழி கேட்பதால் அங்குள்ள மனைப்பிரிவு உரிமையாளருக்கும், இவருக்குமிடையே உள்ள பிரச்சனை காரணமாக மேற்கண்ட புகாரை மனுதாரர் இம்முறை மன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி ஆணையரின் 09.06.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரின் (பொறுப்பு) அறிக்கை, வாக்குமூலம் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கள்ளக்குறிச்சியைச் சார்ந்த மனுதாரர் திரு. A. கந்தசாமி என்பவர் தனது 22.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட புல எண்.156/4, 157/1, 2A, 3A அயன் நஞ்சை விவசாய நிலத்தில் கள்ளக்குறிச்சி நகராட்சியின் அனுமதியின்றி புதிதாக ஸ்ரீராஜேஸ்வரி நகர் என்கிற மனைப்பிரிவில் 10 தனிவீடுகள் நீர்வழிப் பாதையினை அடைத்து முறைகேடாக கட்டப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட புல எண். 156/4, 157/1, 2A, மற்றும் 3A ஆகியவற்றில் 2.11 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜேஸ்வரி நகரில் உள்ள 54 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் 22.08.2019 நாளிட்ட நடவடிக்கைகள் ஆணையின் வாயிலாக சில நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது ஆவணங்களின் வாயிலாகத் தெரிய வருகிறது. இவ்வாணையில் விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத அனைத்து மனைகளுக்கும் வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் வசூலிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்காணும் மனைப்பிரிவில் நகராட்சியின் கட்டட அனுமதியின்றி, 10 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக வரப்பெற்ற புகாரினை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையர் 02.03.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வரைபட அனுமதி, கட்டட அனுமதி போன்ற

ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி கட்டட உரிமையாளரிடம் கோரியுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. மேற்படி கட்டடங்கள் நகராட்சி அனுமதியின்றி கட்டப்பட்டிருப்பின் தொடர் நடவடிக்கையாக கட்டடங்களை உரிய விதிகளின்படி உரிய காலத்திற்குள் **Lock and seal** மற்றும் நீதிமன்ற நடவடிக்கை போன்ற சட்ட பூர்வமான நடவடிக்கைகளை 3 மாத காலத்திற்குள் மேற்கொள்ளுமாறும் அதன் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்புமாறும் கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A. கந்தசாமி,
14–C, கணக்குப்பிள்ளை தெரு,
கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம்.

2) ஆணையாளர், கள்ளக்குறிச்சி நகராட்சி,
கள்ளக்குறிச்சி – 606 202,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/7/23
உதவிப் பதிவாளர்

27/07/23